# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.34/2019 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா- 01(PW-01 ) |
| பெயர் | :- | மாணிக்கம் |
| தேதி | :- | 23-07-2025 |

**சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**02- ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-**

தனபால், அங்கமுத்து ஆகிய இருவரும் என் உடன் பிறந்த சகோதர்கள் என்றால் சரிதான். மூவரும் கூட்டாக துணி வணிகம் செய்து வந்தோம் என்றால் சரிதான். அங்கமுத்து எனக்கு அண்ணன். பிரதிவாதிகள் இருவரும் அங்கமுத்துவின் மகன்கள். அங்கமுத்து 2018 ஆம் ஆண்டு இறந்தார். அங்கமுத்துவின் வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அங்கமுத்து இறக்கும்வரை கூட்டாக துணி வணிகம் செய்து வந்தோம் என்றால் இல்லை. 1985 ஆம் ஆண்டு வாக்கில் தனிதனியாக துணி வணிகம் செய்ய தொடங்கினோம். அவரவர் தனிதனியாக லாப நட்டங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றால் சரிதான்.

27.03.1985 தேதியிட்ட ஆவண எண்.1107/1985 கொண்ட பரிவர்த்தனை பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை 06 ஆம் வழக்குச் சொத்தாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 15.12.1971 ஆம் தேதியன்று என் தகப்பனார், அங்கமுத்து, தனபால், நான் ஆகிய நால்வரும் பாகம் பிரித்துக்-

கொண்டோம் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு பாகம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். அந்த பாகப்பிரிவினையில் எந்த சொத்து யாருக்கு ஒதுங்கியது என்று தெரியும். A அட்டவணை சொத்து அங்கமுத்துவிற்கும் B அட்டவணை சொத்து எனக்கும் C அட்டவணை சொத்து தனபாலுக்கும் ஒதுக்கப்பட்டன. மேற்சொன்ன சொத்துக்களை தனிதனியாக அனுபோகம் செய்கிறோமா என்றால் இல்லை. கூட்டாகத்தான் அனுபோகம் செய்கிறோம்.

பாகப்பிரிவினை பத்திரத்தில் அங்கமுத்துவிற்கு ஒதுக்கப்பட்ட A அட்டவணை சொத்தை மட்டும் ராமலிங்கம், கந்தப்பகவுண்டர் ஆகியோ-ரிடம் கொடுத்துவிட்டு அவர்களின் சொத்துக்களை அங்கமுத்து வாங்கிக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன மூன்று சொத்துக்களுடன் சகோதர்களாகிய நாங்கள் கூட்டாக வாங்கிய வேறு சொத்துக்களையும் சேர்த்து மொத்தமாகத்தான் பரிவர்த்தனை செய்து-கொண்டோம். பரிவர்த்தனை பத்திரத்தில் நாங்கள் மூவரும் கையொப்பம் இட்டுள்ளோம். மற்ற சொத்துக்கள் என்று நான் எதை சொல்கிறேன் என்றால் கூட்டுகுடும்ப பொது நிதியிருந்து வாங்கிய சொத்துக்களை சொல்கிறேன். அந்த சொத்து எங்கள் மூவருக்கும் கூட்டுச் சொந்தமானது. பரிவர்த்தனை மூலம் வந்த சொத்து எது என்று தனியாக சொல்லமுடியாது. அதில் வந்த சொத்தையும் ஏற்கனவே இருந்த சொத்தையும் சேர்த்து மொத்தமாக சுற்றுச்சுவர் வைத்திருக்கிறோம். மற்ற இரு சகோதர்களுக்கும் தெரியாது. சுற்றுச்சுவரை 02 ஆம் பிரதிவாதி கட்டினார் என்றால் இல்லை. மூன்று சகோதர்களும் சேர்ந்துதான் கட்டினோம். நாங்கள் சகோதர்கள் மூவரும் 1971 ஆம் ஆண்டே சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொண்டோம்

என்றும் அந்த பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை மீண்டும் பாகப்பிரிவினை செய்யவேண்டிய அவசியமில்லை என்றும் சொன்னால் மீண்டும் பரிவர்த்தனையில் சொத்துக்கள் ஒன்றாக கலக்கப்பட்டுவிட்டன. நாங்கள் கூட்டாகத்தான் அனுபோகம் செய்துவருகிறோம்.

கூட்டுகுடும்ப நிதியிலிருந்து வாங்கப்பட்ட சொத்துக்களைதான் தலைக்கு 1/3 பாகமாக பிரிக்கவேண்டும் என்றும் மொத்த சொத்தையும் பிரிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பரிவர்த்தனைக்கு பிறகு எந்தெந்த சொத்துக்கள் எங்கெங்கு உள்ளன என்று எனக்கு நன்றாக தெரியும் என்றும் தனிதனியாகதான் அனுபோகம் செய்து வருகிறோம் என்றும் சொன்னால் சரியல்ல.

29.12.2000 ஆம் தேதியன்று என் தகப்பனார் உத்தண்ட முதலியார் சகோரர்கள் மூவர் பெயரிலும் விருப்பாவணம் எழுதி பதிவு செய்து- கொடுத்தார் என்றால் சரிதான். அதுதான் வாதி தரப்பு 11 ஆம் சான்றாவணம் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபோது அசல் விருப்பாவணத்தின் நகலை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். விருப்பாவணத்தின் அசல் என்னிடம் இல்லை. 01 ஆம் பிரதிவாதி சண்முகசுந்தரம் வசம் உள்ளது. என்னிடம் காட்டப்படுவது அந்த நகலா என்றால் ஆமாம். அந்த விருப்பாவணத்தில் யார் யார் சான்றொப்பம் இட்டது என்றால் 01 ஆம் பிரதிவாதி சண்முகசுந்தரமும் கோபால் என்பவரும் சான்றொப்பம் இட்டனர். கோபால் இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் இறந்துபோன கோபாலின் இறப்பு சான்றிதழின் நகல் என்றால் சரிதான். அந்த சான்றிதழை பொறுத்து எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

கோபால் 2007 ஆம் ஆண்டு இறந்தார். விருப்பாவணத்தில் கண்ட சொத்துக்களைதான் மூன்றாக பிரிக்க முடியும் என்று சொன்னால் சரியல்ல. அசல் விருப்பாவணத்தின் நகல் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் மொத்த சொத்துக்களின் உரிமைமூல ஆவணங்களின் நகலை அண்ணன் அங்கமுத்து என்னிடம் கொடுத்தார். மொத்த சொத்தையும் 1/3 பாகமாக பிரித்துக்கொள்ளலாம் என்றும் அதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சொல்லி கொடுத்தார். மொத்த சொத்துக்களின் அசல் ஆவணங்கள் அங்கமுத்துதான் வைத்திருந்தார். அவர் இறந்த பிறகு அவற்றை சண்முகசுந்தரம் வைத்துள்ளார். அண்ணன் அங்கமுத்து இறந்தபின் அவர்தான் வைத்திருக்க வேண்டும். அங்கமுத்துவின் மூத்த மகன் அவர்தான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge, Salem.